# மார்ச் - 15 - வியாழன்

### தூய லூயிஸ் மகிலாக

## தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்: திபா. 106:21

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 32 : 7 – 14

அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி, ”இங்கிருந்து இறங்கிப்போ. நீ எகிப்திலிருந்து நடத்திவந்த உன் மக்கள் தங்களுக்குக் கேடு வருவித்துக்கொண்டனர். நான் கட்டளையிட்ட நெறியிலிருந்து இதற்குள்ளாகவே விலகி அவர்கள் தங்களுக்கென ஒரு கன்றுக் குட்டியை வார்த்துக் கொண்டார்கள். அதற்கு வழிபாடு செய்து, பலியிட்டு, ”இஸ்ரயேலே, எகிப்து நாட்டினின்று உன்னை நடத்தி வந்த தெய்வங்கள் இவையே” என்று கூறிக் கொள்கிறார்கள்” என்றார். மேலும் ஆண்டவர் மோசேயிடம், ”இம் மக்களை எனக்குத் தெரியும் வணங்காக்கழுத்துள்ள மக்கள் அவர்கள். இப்போது என்னை விட்டுவிடு. அவர்கள்மேல் என் கோபக்கனல் மூண்டிருப்பதால் நான் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன் உன்னையோ பேரினமாக்குவேன்” என்றார். அப்போது மோசே தம் கடவுளாகிய ஆண்டவர்முன் மன்றாடி, ”ஆண்டவரே, மிகுந்த ஆற்றலோடும் வலிமைமிகு கரத்தோடும் நீர்தாமே எகிப்து நாட்டிலிருந்து கொண்டுவந்த உம் மக்களுக்கு எதிராக உம் கோபம் மூள்வது ஏன்? ”மலைகளில் அவர்களைச் சாகடிப்பதற்கும் மண்ணிலிருந்து அவர்களை அழித்தொழிப்பதற்குமாக வஞ்சகமாய் ஆண்டவர் அவர்களைக் கூட்டிச் சென்றார்” என்று எகிப்தியர் சொல்ல இடம் தருவானேன்? உமது கடுஞ்சினத்தை விட்டுவிட்டு உம் மக்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும். உம் அடியாராகிய ஆபிரகாமையும், இஸ்ரயேலையும் நினைந்தருளும். நான் உன் வழிமரபினரை விண்மீன்கள் போல் பெருகச் செய்வேன். நான் வாக்களித்த இந்நாடு முழுவதையும் உன் வழிமரபினருக்கு அளிப்பேன் அவர்கள் அதை எனறென்றும் உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் என்று நீராகவே அவர்களுக்கு ஆணையிட்டு அறிவித்துள்ளீரே” என்று வேண்டிக்கொண்டார் அவ்வாறே ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இரக்கத்திற்கேற்ப என்னை நினைவு கூரும்

### நற்செய்தி : யோவான் 5 : 31 – 47

அக்காலத்தில் இயேசு யூதர்களிடம் ”என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப்பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப்பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத்தெரியும். யோவானிடம் ஆளனுப்பி நீங்கள் கேட்டபோது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல. நீங்கள் மீட்புப் பெறுவதற்காகவே இதைச் சொல்கிறேன். யோவான் எரிந்து சுடர்விடும் விளக்கு. நீங்கள் சிறிது நேரமே அவரது ஒளியில் களிகூர விரும்பினீர்கள். ”யோவான் பகர்ந்த சான்றை விட மேலான சான்று எனக்குண்டு. நான் செய்து முடிக்குமாறு தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்கான சான்றாகும். ”என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச்சான்று பகர்ந்துள்ளார். நீங்கள் ஒருபோதும் அவரது குரலைக் கேட்டதுமில்லை. அவரது உருவைக் கண்டதுமில்லை. அவரது வார்த்தையும் உங்களுக்குள் நிலைத்திருக்கவில்லை ஏனெனில், அவர் அனுப்பியவரை நீங்கள் நம்பவில்லை. மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்களே! அம் மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது. வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை. ”மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவையில்லை. உங்களை எனக்குத் தெரியும். உங்களிடம் இறையன்பு இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்துள்ளேன். ஆனால் என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொருவர் தம் சொந்தப்பெயரால் வருவாரானால் அவரை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? தந்தையின் முன்னிலையில் உங்கள் மேல் குற்றம் சுமத்தப்போகிறவன் நான் என நினைக்காதீர்கள். உங்கள் சார்பாக நிற்பார் என நீங்கள் எதிர்பார்க்கும் மோசேயே உங்கள் மேல் குற்றம் சுமத்துவார். நீங்கள் மோசேயை நம்பியிருந்தால் என்னையும் நம்பியிருப்பீர்கள். ஏனெனில் அவர் என்னைப்பற்றித் தான் எழுதினார். அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை என்றால் நான் சொல்லுபவற்றை எவ்வாறு நம்பப்போகிறீர்கள்“ என்றார்.

**தியானம்:** மனிதர் தரும் மதிப்பல்ல மாறாக, நமதாண்டவர் இயேசுவுக்கு உகந்தவர்களாக புனிதர்கள் வாழ்ந்த வாழ்வையே எல்லாம் வல்ல இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கிறரென நற்செய்தி படிப்பிக்கின்றது நான் கத்தோலிக்கன் என்பதை திருமுழுக்குச்சான்றிதழை வைத்தல்ல. மாறாக, என்னுடைய செயல்பாடுகளை அடிப்படையாக வைத்து மற்றவர்கள் அறியவேண்டும் இதனையே, “ஒருவரின் செயல்பாடுகளைக் கொண்டே எப்படிப்பட்டவர் என்பதை நாமறிகிறோம்“ என்பார்கள். மனிதர் சில சமயங்களில் உண்மையை ஏற்க மறுத்து, தங்களை மாற்றவேண்டிய தேவை அல்லது மற்றவர்கள் மதிக்கமாட்டார்கள் என அஞ்சுகிறார்கள். நாம் அடைபட்ட எமது உள்ளத்தைச் சிறிது திறந்து இளகியமனம் கொண்டவர்களாக உண்மையைக் கண்டுகொள்வோம் என இயேசு உணர்த்துகிறார். நம் சொந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இயேசுவை மதிப்பிடுவதற்குப் பதிலாகக் கடவுளின் பார்வையில் இயேசு எந்நிலையில் உள்ளார் என்பதைச் சிறிது கவனித்திருந்தால் இயேசுவைப் பற்றிய உண்மையை நாம் அறிந்துரகொள்ள முடியும். இவ்வாறான போதனை எமக்கும் சவாலாக உள்ளதாகத் தோன்றலாம். நம் விருப்பு வெறுப்புகளை அல்லது நமது தனிப்பட்ட கருத்துக்களை அடுத்தவர் மீது பலவந்தமாகத் திணிப்பதனைத் தவிர்த்து எல்லாம் வல்ல இயேசுவை நாமும் காண முயலவேண்டும். நாம் இயேசுவை மட்டுமல்ல அடுத்தவரையும் எவ்வாறு புரிந்து கொள்கிறோம்? இயேசுவின் எதிரிகள் அவர்மீது பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி எந்த அதிகாரத்தோடு போதிக்கத் துணிந்தார் என்பது அவர்கள் எழுப்பிய ஒரு முக்கியமான கேள்வி. இயேசு புரிந்த செயல்களே அவர் யார் என்பதை வெளிப்படுத்துகின்றன. இயேசு தம்மைப்பற்றியும் தம் பணிபற்றியும் விளக்கம் தர அவர் கூறியது: “மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவையில்லை“ (யோவான் 5:41) என்பதாகும். இயேசுவின் செயல்கள் அனைத்தும் அவர் கடவுளிடமிருந்து வந்திருக்கிறவர் என்பதை அனைவருக்கும் அறியவைத்தது. ஒருவர் தமக்குத்தாமே சாட்சியாக இருக்க முடியாது. அவருக்குப் பிற சாட்சிகள் தேவை. நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் செய்யும் செயல்கள் நாம் ‘கிறிஸ்தவர்கள்’ என்பதை மற்றவருக்கு அடையாளம் காட்டவேண்டும். அப்படிப்பட்ட வாழ்வு வாழ முயல்வோம்.